## தமிழ் நாடு அரசு

**சுருக்கம்**

இயற்கை இடர்பாடுகள் - புயல், வெள்ளம், தீ விபத்துக்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் குடிசைகள் சேதமடையும் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் ரொக்க நிவாரணத் தொகை உயர்த்தி - ஆணையிடப்படுகிறது

---

**வருவாய் (என்சி,2) துறை**

அரசாணை (நிலை)எண்: 388, நாள் 4.10.2001.

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை)எண்.741,வருவாய், நாள் 8,5,87,
2. அரசு ஆணை (நிலை)எண். 1432, வருவாய், நாள் 19,11,91.
3. அரசு ஆணை (நிலை)எண்.535, வருவாய், நாள் 22,6,96.

---------

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் புயல், மழை, தீ விபத்துக்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் குடிசைகள் சேதமடையும் போது பாதிக்கப்பட்டவர்களக்கு நிவாரணமாக முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ.1,000/- வீதமும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ.500.- வீதமும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

2.. புயல், மழை, தீ விபத்துக்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் சேதமடையும் குடிசைகளக்கு தற்போது வழங்கப்பட்டவதும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கக் கோரி பல தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளன. இவைகளை, 3.9.2001 அன்று வருவாய்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து மிகுந்த கவனமுடனம் அக்கரையுடனம் பரிசீலித்து, தமிழ்நாட்டில் புயல், வெள்ளம், தீ விபத்துக்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் குடிசைகள் சேதமடையும் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு , முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளக்கு தற்போது வழங்கப்பட்ட னள வரும் நிவாரணத் தொகையை குடிசை ஒன்றுக்கு ரூ.1,000.-லிருந்து ரூ.2,000.-

ஆகவும் (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) பகுதியாக செதமடைந்த குடிசைகளக்கு ரூ.1,000.- (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆகவும் உயர்த்தி அரசு ஆணையிடுகிறது. இச்செலவினத்தை இயற்கை இடர்பாடுகளுக்கான நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வருகிறது.

4, இவ்வரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் அத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.250/து.செ.(மு)/2001 நாள் 4.10.2001-இன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவேந்திரநாத் சாரங்கி,
அரசு செயலாளர்,

பெறுநர்

முதன்மை ஆணையர் மற்றம் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5,
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைபர், சென்னை.18. (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர்(தணிக்கை) பெரியார் பில்டிங், நத்தனம், சென்னை-35,
மாநில கணக்காய்வுத் தலைவர் (ஏ ஈ) சென்னை-35..
கருவூல கணக்கு இயக்குநர் சென்னை-15,
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு, தெற்கு, வடக்கு, சென்னை-9) சென்னை5/1/9/35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்

நிதி (வருவாய்)துறை, சென்னை-9,
வருவாய்(இ.இ.1 பிரிவு)த்துறை சென்னை-9,
இருப்பு கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.